அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 08/96

எனது இல. 111/0256/2/68/எல்/எச்

அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,

பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற

அலுவல்கள் அமைச்சு,

சுதந்திர சதுக்கம், கொழும்பு 7

1996. 03-15

செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

விபத்துக்களுக்கான கடன்களும் பிற கடன்களும்
தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியா
யத்திற்கான திருத்தங்கள்.

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில் 10.4 ஆம் உபபிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உபபிரிவுகளை பதிலீடு செய்யவும்.

10.4 பிணையாளிகள் –

10 வருடங்களுக்கு குறைந்த சேவைக் காலத்தையுடையவர்களும் நிரந்தர ஓய்வூதிய உரித்துடையவர்களுமான உத்தியோகத்தர்கள் தொடர்பில் 10 வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்துடன் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய ஒரு பிணையாளியோ அல்லது 05 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தையும் நிரந்தர ஓய்வூதிய உரித்துமுடைய இரண்டு பிணையாளிகளை முன்வைத்தல் வேண்டும். 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்துடன் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு பிணையாளிகள் அவசியமில்லை.

10.4.1 பிணையாளிகளை முன் வைப்பதில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் பிரதான கடனாளியால் செலுத்தப்படாத கடன் தொகையும் அதற்கான வட்டியும் சமபங்காகச் செலுத்துவதற்கு பிணையாளிகள் இருவரும் தனித்தனியே உடன்படும் வகையில் முறியொன்றில் கையொப்பமிட வேண்டும். அதற்காக 10/95 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள பொதுப்படிவம் 158(அ) வைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

02. இச் சுற்றறிக்கை திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரத்ன.
செயலாளர்.